# வள்ளலாரின் வழிவழித் தொண்டர்
# கட்டமுத்துப்பாளையம் நாராயணர்


புலவர் **சீனி. சட்டையப்பர்**
வடலூர்.



வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம்
5, கண்காட்சி நகர்,
வடலூர் - 607 303.

# வள்ளலாரின் வழிவழித் தொண்டர்
# கட்டமுத்துப்பாளையம் நாராயணர்

புலவர் **சீனி. சட்டையப்பர்**
வடலூர்.

வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம்
5, கண்காட்சி நகர்,
வடலூர் - 607 303.

வெளியீடு : 16

முதற்பதிப்பு : 07.07.2019
விகாரி, ஆனி - 22, ஞாயிறு
நாராயணர் சமாதியைப் புதுப்பித்து நன்னீராட்டு விழா நடத்திய பொழுது வெளியிடப்பட்டது.

விலை : 5 /-

அச்சிட்டோர் : ரோஜா பிரிண்டர்ஸ், வடலூர்.

## அறிமுகம்

கட்டமுத்துப் பாளையம் நாராயண ரெட்டியார் எங்களுடைய தாத்தா. அவர் வள்ளற்பெருமானைக் கட்டமுத்துப் பாளையத்திற்கு அழைத்து வந்தார். தாத்தாவின் விருப்பத்தின் பேரில் வள்ளலார் அவர் இல்லத்தில் எழுந்தருளிச் சென்றார்கள்.

அதுமுதல் எங்கள் தாத்தா வள்ளலார் மீது ஈடுபாடு கொண்டார்; வடலூருக்குச் சென்று வந்தார்; புலை கொலை தவிர்த்தார்; அன்னதானம் செய்தார்; வடலூர் சத்திய தருமச்சாலையில் பசியாற்றும் பணியில் ஈடுபட்டார்.

தருமச்சாலையில் தொண்டாற்றி வந்தபோது அவர் வடலூரிலேயே உயிர் அடக்கம் கொண்டார். எம் தந்தையார் அவரது உடலை கட்டமுத்துப் பாளையத்திற்கு எடுத்து வந்து, சன்மார்க்க முறைப்படி நல்லடக்கம் செய்தார். எங்கள் மரபுப்படி எரிப்பதுதான் வழக்கம்.

ஆண்டுதோறும் அவர் மறைந்த தைப்பூசத்தின் முதல்நாள் அகவல் ஓதி, அன்னதானம் செய்து சமாதி

வழிபாடு செய்து வந்தார் என் தந்தை. வடலூரிலிருந்து சன்மார்க்க அன்பர்கள் பலரும் வந்திருந்து இந்நிகழ்வை நிகழ்த்துவர்.

என் தந்தைக்குப் பின் அது நடைபெறாமல் போயிற்று. சமாதியும் இடம் தெரியாமல் மண் மேடிட்டு விட்டது. இவ்வாண்டு அம்மண்மேட்டினை அகற்றி சமாதியைக் கண்டறிந்தோம். பூச நாட்களில் அகவல் ஓதி அன்னதானம் செய்தோம். பழுதுபட்டிருந்த சமாதியைச் செப்பம் செய்து தற்போது புதுக்கியுள்ளோம்.

இச்சமாதியைப் புதுப்பித்ததின் மூலம் எங்கள் உறவினரும், இளைஞர்களும் இனிவரும் வழிவழிக் குடும்பத்தினரும் சன்மார்க்க வழியில் நடக்க முற்படுவர்.

இந்நாளில் அவரின் வரலாற்று நூலினை வெளியிடுகின்றோம். எங்கள் மரபில் தோன்றிய இவரின் வரலாற்றை வெளியிடுவதன் மூலம்

சன்மார்க்க மரபின் பெருமையினைப் பெறுகிறோம். எங்கள் குடும்பத்தினரும், சுற்றத்தாரும், இவ்வூராரும் சன்மார்க்கக் கொள்கையைப் பின்பற்றுவோம்.

இவ்வரலாற்றினை வடலூர் புலவர் சீனி. சட்டையப்பனார் எழுதி வெளியிட்டார். தற்போது அதனை வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனத்தினர் வெளியிட்டுத் தந்துள்ளனர். அவர்களுக்கும், எங்கள் தாத்தாவின் சமாதியைக் கண்டறிந்து புதுப்பிக்கத் தூண்டிய கருங்குழி கிஷோர் குமாருக்கும், புதுப்பிக்க உதவிபுரிந்த எம் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி.

**ப. இராமகிருஷ்ணன்**

சன்மார்க்க சங்கம்

கட்டமுத்துப்பாளையம்

திருத்துறையூர் வழி, பண்ருட்டி வட்டம்,

கடலூர் மாவட்டம் - 607 205.

செல் : 9244104311, 9790101166, 9578380306.



நாராயண ரெட்டியார் - தைலம்மை

07.10.1855 - 27.01.1945

# கட்டமுத்துப்பாளையம் நாராயணர்

## வளாகத்தில் வழிபாடு

மேட்டுக்குப்பம் அண்ட கோடிகள் அனைத்தும் வணங்கிப் போற்றும் சித்திவளாகம். அங்கே ஞானசிங்காதன பீடத்திற்கு ஆராதனை நடந்து கொண்டிருந்தது; அன்பர்கள் பேரார்வத்துடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் பாடிப் பணிந்து வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். தன்வசம் இழந்து கண்ணீர் பெருக்கி, கசிந்துருகி நின்று கொண்டிருந்தார்கள்.

ஆராதனைக்கு அவசியம் வந்து கலந்து கொண்டிருந்தார்கள் வள்ளற்பெருமான். அன்றைய தினம் வழிபாடு தொடங்கியும்கூட பெருமானைக் காணவில்லை. ஆனாலும் அன்பர்கள் உணர்வுப் பெருக்குடன் ஒருமித்த கருத்துடன் தரிசனம் செய்து கொண்டிருந்தார்கள்.

## அன்பரின் மனநிலை

அத்தருணம், கூட்டத்தில் ஓரன்பர் ஓரமாக ஒதுங்கி நின்று வழிபட்டுக் கொண்டிருந்தார். எட்டி எட்டி ஆராதனையைக் கண்ணுற்றுப் பரவசமானார்; கைக்களை உச்சியின் மீது குவித்த படியே உணர்வு மயமாய் நின்றார். முன்வந்து நன்றாக தரிசனம் செய்ய அவருக்கு நேரிடவில்லை. அப்படிச் செய்ய அவர் விரும்பவுமில்லை.

## முன் வந்து தரிசியும் காணும்

அப்போது வெளியில் சென்றிருந்த நம் வள்ளற்பெருமான் திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழிபாட்டுக் கூடத்தில் திருமலரடிகளை எடுத்து வைத்தார்கள். அவ்வளவுதான் "ஏன்காணும் இப்படி ஒதுங்கி நின்று தரிசிக்க வேண்டும்? நன்றாக முன்வந்து தரிசியும் காணும்" எனத் திருவாய் மலர்ந்தருளி ஒதுங்கித் தரிசனம் செய்த அன்பரின் கைகளைத் தம் திருக்கரங்களினால் பிடித்துக் கொண்டார்கள். முன்வரும்படி அழைத்தருளினார்கள்.

அத்துடன் நன்கு தரிசனம் செய்யும்படியும் அறிவுறுத்தினார்கள்.

வள்ளற்பெருமானின் தெய்வத் திருக்கரங்களால் தீண்டப்பெற்ற அவருக்கு உச்சியைப் பிடித்து உலுக்குவதுபோல் இருந்தது. உடல் எல்லாம் சிலிர்த்துப் போனார். தன்னை அறியாமல் தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தினார். சோபம் மீதுறப் பெற்றார்; வேரற்ற மரம் போல விழுந்து வணங்கினார்.

## விம்மிதம் அடைந்தார்

“ஆகா! சுத்த தேகம் பெற்றவர்கள் நம் பெருமான்; பிரணவ தேகம் பெற்றவர்கள் நம் ஐயா; ஞானதேகம் பெற்றவர்கள் நம் அடிகள்; அவர்களின் அற்புதத் திருக்கரங்களால் தீண்டப் பெற்றால் நமக்கு எவ்வகை உணர்ச்சி உண்டாகும் என்று எப்போதோ நினைத்தோமே! அது இன்று இப்போது இப்படி நடந்துவிட்டதே ; எனது பாக்கியமே பாக்கியம்!” என விம்மிதம் அடைந்தார். சொல்ல ஒண்ணாமல் நா

தழுதழுத்தார்; "ஆண்டவனே ஆண்டவனே" என்று வாய்க் குழறினார்.

## யார் அவர் ?

அவர்தான் கட்டமுத்துப்பாளையம் நாராயணர். கல்பட்டு ஐயாவின் சீடரான சுப்புராயர் தேர்ந்தெடுத்த செல்வமணி; வடலூரில் தருமச்சாலைப் பணிகளை மாண்புடன் நடத்திய வளர்மணி. சத்தியதருமத்தைப் பல்லாண்டுகள் பாங்குடன் நடத்திய பால்மணி.

திருநறுங்குன்றத்திலிருந்து சாலைப் பணிகளுக்கென வந்து சேர்ந்தார் கல்பட்டு ஐயா; தெலுங்கு தேசத்திலிருந்து அதற்கெனவே வந்து சேர்ந்தார் சுப்புராயர்; கடலூர் மாவட்டம், பண்ணுருட்டிக்கு வடக்கே கட்டமுத்துப் பாளையத்திலிருந்து அப்பணிகளைத் தொடர்ந்திட வந்து சேர்ந்தார் நாராயணர். அவ்வாறு வெளியிடங்களில் இருந்து வந்து நிலையான பணிகளை மேற்கொண்ட தொண்டர் பரம்பரையைச் சார்ந்தவரே நாராயணர்.

## இளம் பருவம்

இராட்சச ஆண்டு, புரட்டாசித் திங்கள் 23 ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை, மக விண்மீனில் (07.10.1855) பிறந்திட்டார். இளம் பருவத்தில் குடும்ப அலுவல்களில் ஈடுபாடில்லை. உழவினையோ - வேளாண்மையையோ கவனிக்க வில்லை. அடிக்கடி கண்டரக்கோட்டைப் புலவனூர்க்குச் செல்வதை வழக்கமாய்க் கொண்டிருந்தார்.

சோதிடர்கள்பாலும், மந்திரவாதிகள்பாலும் அக்கறை ; சோதிடம் பயில, மந்திரம் பயில நாட்டம். ஆதலின் விவசாய வேலைகளில் இல்லை ஈட்டம்.

திருமணமானால் குடும்ப அலுவல்களில் ஆர்வம் உண்டாகும் எனப் பெற்றோர் தீர்மானித்தனர். "**தைலம்மை**" என்னும் நல்லம்மையை மணம் புரிவித்தனர். குடும்ப ஈடுபாடு சீராக வளர்ந்தது. மூன்று பிள்ளைகள் பிறந்தனர்.

ஆனாலும் மந்திர தந்திர சோதிடக்கலைகளில் ஈடுபாடு நின்ற பாடில்லை. புலவனூருக்குச் சென்று வருவதும் குறைந்த பாடில்லை.

## நம்பெருமான் எழுந்தருளல்

புலவனூரில் கருணீகர் மரபினரிடையே பிரச்சினை ஒன்று தோன்றியது. அதனைப் பெருமானிடத்தில் சென்று விண்ணப்பம் செய்தனர். புலவனூருக்குப் பெருமான் எழுந்தருளினார்கள். மரபினரிடையே தோன்றிய மாற்றங்களை நீக்கி அமைதி செய்வித்தார்கள். அத்தருணத்தில் நம் பெருமானைக் கண்டு தன்வயம் இழந்தவரானார் நாராயணர்.

வந்த அலுவல் முடிந்து வடலூருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள் வள்ளலார். அப்போது கட்டமுத்துப் பாளையம் நாராயணர் தமது இல்லத்திற்கு வந்து தங்கிச் செல்ல வேண்டும் என்று வேண்டினார். அவ்வாறே பெருமான், அவர்கள் இல்லத்தில் சிறிதுநேரம் தங்கினார்கள். அவ்வளவே ; நாராயணர் அதுமுதல் நம் பெருமானுக்கு மீளா அடிமையானார்.

## பேரின்பப் பெருவாழ்வு

நம் பெருமான் சத்திய தருமத்தாலும், ஜீவகாருண்யச் சீலத்தினாலும், கொல்லாமை என்னும் குருஅருள் நெறியாலும் பேரின்பப் பெருவாழ்வினைப் பெற்று ஒளிர்ந்திட்டார்கள்.

இம்மை இன்ப வாழ்வினும் ஏற்றமுடையது மறுமை இன்ப வாழ்வு ; மறுமை இன்ப வாழ்வினும் மகத்துவமுடையது பேரின்ப வாழ்வு ; பேரின்ப வாழ்வினைப் பெற்றவர் சுத்த பிரணவ, ஞான தேகங்களை ஒரு சேரப் பெற்று ஓங்கி நிற்பார்கள். அவர்கள் கடவுள்தான் என்பதனைக் கேட்டறிந்தார். நம்பெருமானிடமும் கண்டறிந்தார்.

அப்போதுதான் "நம்பெருமானின் தூயதேக திருக்கரங்கள் தம்மீது பட நேர்ந்தால் எவ்வாறு இருக்குமோ", என ஏக்கமுற்றார். அவரது அப்பழுக்கற்ற ஏக்கத்தினைத்தான் அன்றைய வழிபாட்டில் கைபிடித்து அழைத்துத் தீர்த்தருளினார்கள் வள்ளற்பெருமான்.

## வடல்வெளி வாழ்வு

மூத்தமகன் குடும்பப் பொறுப்பினைக் கவனிக்கும் நிலைக்கு வளர்ந்திட்டான். அவனுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்து வைத்தார் நாராயணர். குடும்ப அலுவல்களை அவனிடம் ஒப்படைத்தார். தான் மட்டும் வடலூருக்கு அடிக்கடி வந்து போகும் பழக்கத்தினை மேற்கொண்டிருந்தார். அப்போது தான் தெலுங்கு தேசத்துப் பெரியவர் சுப்புராயரின் பழக்கம் உண்டாயிற்று. இவ்வாறாகச் சாலைத் தொண்டுக்கு நாராயணரை ஆட்படுத்தும் நிகழ்வுகள் நடந்தவண்ணமிருந்தன.

## உகந்த பணி

சாலையில் தொண்டு செய்த சுப்புராயர் தொடர்பினால் கட்டமுத்துப்பாளையத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நாராயணர் அதற்கு ஆசானாய் அமர்ந்தார். தமிழும் தெலுங்கும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டது. இடையிடையே சுப்புராயரும் பள்ளிச் செயல்பாடுகளைக் கவனிக்கச்

சென்று வந்தார். நாராயணர் பள்ளியைத் திறம்பட நடத்தி வந்தார்.

ஆனாலும் உத்தம தருமமும், சத்திய தருமமும், கடவுள் கற்பித்த உண்மைத் தருமமும், பசி நீக்குதலும், கொலை நீக்குதலுமே என்பதனைத் தேர்ந்து உணர்ந்தார். முடிவில் வடலூருக்கு வந்து சாலைப் பணிகளை மேற்கொள்ளவே நாராயணர் விரும்பினார். ஆதலின் பள்ளிப் பணிகளைப் பிறரிடம் ஒப்படைத்து உத்தர ஞான சிதம்பரத்திற்கே வந்து விட்டார். உடல், பொருள், உயிர் முழுவதும் தருமச்சாலைப் பணிகளுக்கு என ஒப்புக் கொடுத்தார்; அவ்வாறு ஆன்ம நேயச் சீலராய்ப் பரிணாமம் பெற்றுக் கொண்டிருந்தார்.

## சிதம்பர சுவாமிகள் செய்தி

இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரத்தை வரைந்தவர்கள் பிறையாறு சிதம்பர சுவாமிகள். அவர்கள் சன்மார்க்க உலகின் கலங்கரை விளக்கெனத் திகழ்ந்தவர்கள். அவர்களோ, "ஒருகால் கட்டமுத்துப்

பாளையத்திலிருந்து நாராயண ரெட்டியார் என்னும் அன்பர் மேட்டுக்குப்பம் வந்தார். சுவாமிகளைத் தரிசித்தார். சில நாட்கள் தங்கியிருந்தார்.

அப்படியிருக்குங்கால் தம்மேல் சுவாமிகள் பரிசம்பட்டால் எப்படி இருக்குமோ என்று அவா உடையவராய்த் தங்கியிருந்தார்.

அப்போது வெளியிலிருந்து வந்து சேர்ந்த ஐயா அவர்கள் நாராயண ரெட்டியாரைத் தீபாராதனையைத் தரிசியும் என்று கைகளைப் பற்றி சந்நிதிக்கெதிரில் விட்டார்கள்.

உடனே உவகை பூத்த உள்ளத்தினராய் பெருமானைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தார்.

அந்த நாராயண ரெட்டியார் அவர்களே சாலையில் நீண்ட நாள் கல்பட்டு ஐயாவுக்குப் பின் அவர் மாணாக்கராயிருந்து அவர் ஆணைப்படி சத்திய தருமச்சாலையை நடத்தி வந்த தெலுங்கு தேசத்து சந்நியாசியாகிய சுப்புராய சுவாமிகளுக்கு உறுதுணையாகி நின்றார்.

மேலும் சென்ற பிரபவ வருடம் வைகாசி 11 ஆம் தேதி சுமார் 37 வருடங்களுக்கு முன் சாலைக் கட்டடத் திருப்பணி வேலையை முடித்து பிரவேச விழா நடத்தி ஆண்டவர் அருளுக்குப் பாத்திரர் ஆனார்.

மேற்படி ரெட்டியார் அவர்கள் பெருமான் திருக்கரத்தால் பரிசிக்கப்பெற்ற பேற்றினை அன்பர்கள் விசாரிக்குந்தோறும் வள்ளல்பால் மாறாத அன்புடையவராய் அந்நிகழ்ச்சியைப் பற்றிக் கூறி அகம் நெகிழ்ந்து உருகி ஆனந்த பரவசராய் சூழ்ந்தோரையும் அம்மயமாக்கும் தகையினராய் விளங்குவார்" எனத் தெரிவித்துள்ளார்கள்.

## தெய்வப் பணி

1867 பிரபவ ஆண்டு வைகாசி 11 இல் தொடங்கப் பெற்றது சத்திய தருமச்சாலை. அப்போது அது கூரை வேய்ந்த கட்டடமாகவே இருந்தது. தொடக்க நாளன்று செங்கல் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா மட்டும் நடந்தேறியது. ஆனால், 1) வள்ளல்பெருமான் 4 ஆண்டுகள் தங்கியருளிய

காலத்தும் 2) கல்பட்டு ஐயா 25 ஆண்டுகள் தொண்டு செய்த காலத்தும் 3) சுப்புராயர் 30 ஆண்டுகள் பணிவிடை செய்த காலத்தும் ஏழையர் பசிபோக்கும் தருமம், விழல் வேய்ந்த கூரைக் கட்டடத்திலேயே நடந்து கொண்டிருந்தது.

அதனை மாற்றிச் செங்கல் கட்டடமாக்கும் எண்ணம் கொண்டார் நாராயணர். அவ்வெண்ணத்திற்கு ஆசி வழங்கினார் சுப்புராயர். ஒத்துழைப்பு நல்கினார்கள் நாகப்பட்டினத்து அன்பர்கள். அத்தகைய தெய்வ வலிவோடு வேண்டிய பொருள்களைச் சேகரம் செய்தார் நாராயணர். பெருமானின் திருவுள்ளப்பாங்கின் படி 60 ஆண்டுகள் நிறைந்த அடுத்த பிரபவ வருடத்தில் 24.05.1927 இல் பிரபவ வைகாசி 11 இல் செங்கல் கட்டடப் பணி முடித்து அங்கே சத்திய தருமத்தை ஓங்கி வளரும்படிச் செய்திட்டார் உத்தமர் நாராயணர். அங்ஙனம் செய்து அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தனிப்பெருங்கருணைக்குப் பாத்திரரானார்.

## தொடர்பணி

தருமச்சாலைத் திருப்பணிக்குப் பேருதவி செய்தவர்களில் முன்னணி பெற்றவர் நாராயணர். அம்மட்டோ! சுப்புராய சுவாமிகள் போல நாராயணரும் ஊர் ஊராகச் செல்வார். தானியங்களைச் சேகரிப்பார். காய்கறிகளைச் சேகரிப்பார். சாலைப் பண்டங்களைச் சேகரிப்பார். எரிபொருள்களைச் சேகரிப்பார். அத்துணையும் வடலூர் தருமச்சாலைக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்; பாதுகாப்பார்; இடைவிடாமல் அன்னப்படையல் செய்வார்; அகம் பூரிப்பார்; அவ்வாறு 37 ஆண்டுகள் செய்த அகத் தொண்டால் திருவருட்பிரகாச வள்ளலின் திருவடிக்கு அணிகலன் ஆனார்.

## சாலைப் பணி

வள்ளற்பெருமான் தொடங்கிய சத்திய தருமத்தினை – தருமச்சாலைப் பணியை 1874 முதல் 1902 வரை கல்பட்டு (இராமலிங்க) அய்யா தொடர்ந்து நடத்தி வந்தார். அப்போதே அவருக்குத் துணையாக இருந்து தொண்டு செய்தார் நாராயணர்.

6.2.1902 இல் சத்திய தருமச்சாலைப் பொறுப்பினைக் கல்பட்டு அய்யா, சுப்புராயப் பரதேசியிடம் ஒப்படைத்தார். அப்போதும் சுப்புராயப் பரதேசியுடன் இருந்து சாலைப் பணியில் தொண்டாற்றினார்.

21.01.1908 முதல் சத்திய தருமச்சாலையின் பொறுப்பினை முழுவதுமாக ஏற்று இவர் சிறப்புற நடத்தி வந்தார்.

இவருக்குப்பின் தருமச்சாலைப் பொறுப்பினைக் கயத்தூர் கொண்டா ரெட்டியார் ஏற்று நடத்தினார்.

நாராயணர் காலத்தில்தான் 24.05.1927 இல் தருமச்சாலையின் முதல் திருப்பணி நடைபெற்றது.

2.2.1931 இல் நாக்கை சாதக சங்கத்தினரால் தருமச்சாலையில் ஐம்பொன் சிலை அமைக்கப்பட்டது.

## நாராயணர் குடும்பம்

நாராயணரின் மனைவி தைலம்மை. இவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகள். மூத்த மகன்

துரைசாமி. இரண்டாவது மகன் பாலகிருஷ்ணன். கடைசி மகன் பங்காரு ரெட்டியார்.

துரைசாமியின் மகன் இராமசாமி. இவர் மகள் சியாமளா. பாலகிருஷ்ணனின் மகன் ஜெயராமன். இவர் வடலூரை அடுத்த கருங்குழிக்குச் சென்று விட்டார். இவருக்கு ஐந்து ஆண்; ஒரு பெண்.

கடைசி மகன் பங்காரு - கமலாச்சி அம்மாள் இணையருக்கு மூவர் ஆண்கள். ஒருவர் பெண்.

மூத்தமகன் சிவராமகிருஷ்ணனுக்குத் திருமணமாகவில்லை. அடுத்தவர் இராமலிங்கம். இவர் மனைவி கிருஷ்ணவேணி. இவர்களுக்குத் தனலட்சுமி - சதாசிவம், வசந்தா - இராதாகிருஷ்ணன் என இருமகள்கள்.

மூன்றாமவர் இராமகிருஷ்ணன் - இவர் மனைவி சுசீலா. இவர்களுக்கு நான்கு ஆண் மக்கள்; பெண் மக்கள் இருவர். அவர்கள் முறையே வாசுதேவன் - உஷா, புஷ்பா; தாமோதரன் - ஹேமலதா, கிருபாகரன் - சுஜாதா,


அருட்பெருஞ்ஜோதி
கட்டமுத்துப்பாளையம் நாராயணர் நினைவிடம்
கட்டமுத்துப்பாளையம்
சன்மார்க்க சங்கம்
எல்லா உயிர்களும்
இன்புற்று வாழ்க

லெட்சுமிநாராயணன் – பத்மாவதி, வசுமதி – திருமலை; பிரமிளா – புருஷோத்தமன்.

கடைசி பெண் சரசு அம்மாள். இவர் கணவர் அப்பர்சாமி.

இராமகிருஷ்ணனும் அவர் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்களே தற்போதைய திருச்செயலுக்கு முன் நிற்கின்றனர்.

நிறைபணி

நம்பெருமானின் நலமிகு தொண்டினால் அகம் பூரித்து அனுபவம் பல பெற்றார். ஞான நூல்களுக்கு நல்விளக்கங்கள் தந்திட்டார். உண்மைத் தொண்டுக்குப் பின்னும் பலரை ஆளாக்கினார். ஆந்திர நாட்டு நெல்லூரிலிருந்து வந்திட்ட மறையவர் குலத்துச்சாது ஒருவரை மீளா அடிமையாக்கினார்.

90 ஆண்டுகள் வாழ்ந்து சிறந்த இவர் நம் பெருமான் திருக்காப்பிட்டு அருளிய தெய்வத்திரு நாளாம் தைப்பூச முதல்நாள் தாரண ஆண்டு தை 14, சனி 27.01.1945 இல் வடலூரில் உயிர் அடக்கம்

கொண்டிட்டார். அவரது நல்லுடல் கட்டமுத்துப் பாளையத்தில் சமாதி செய்யப் பெற்றது.

## அமைவிடம்

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில் கட்டமுத்துப்பாளையம் உள்ளது. பண்ருட்டியிலிருந்து வடக்கே சென்னை நெடுஞ்சாலையில் 6 கி.மீ தொலைவில் உள்ள ஊர் இராசாபாளையம். அங்கிருந்து மேற்கே 2 கி.மீ.

பண்ருட்டி - விழுப்புரம் தொடர்வண்டிப் பாதையில் பண்ருட்டிக்கு அடுத்த தொடர்வண்டி நிலையம் திருத்துறையூர். இங்கிருந்து கிழக்கே 1/2 கி.மீ.

புலவனூரிலிருந்து தென்மேற்கே 4 கி.மீட்டர். வடலூரிலிருந்து வடக்கே 34 கி.மீ. கோலியனூரி - லிருந்து 15 கி.மீ.

இவரின் நினைவிடம் ஊருக்குக் கிழக்குப் பக்கத்தில் திருத்துறையூர் செல்லும் சாலைக்குத் தென்பால் அமைந்துள்ளது.



கட்டமுத்துப்பாளையம் நாராயணர் புதுப்பித்த சத்திய
தருமச்சாலை கட்டடம் - 1927